# சூரியா கல்வி குழுமத்தில் வேலைவாய்ப்பு முகாம்

**விக்கிரவாண்டி, செப். 13–**

விக்கிரவாண்டி சூரியா கல்வி குழுமம் சார்பில் வரும் 17ம் தேதி வேலை வாய்ப்பு முகாம் நடக்கிறது.

விக்கிரவாண்டி சூரியா கல்வி குழுமம் மற்றும் சென்னை ஜாப்ஸ் சார்பில், வேலை வாய்ப்பு முகாம் நடக்கிறது.

கல்லூரி வளாகத்தில் வரும் 17ம் தேதி நடக்கவுள்ள முகாமில், முன்னனி உற்பத்தி நிறுவனங்களும், மென்பொருட்கள் நிறுவனமும், சேவைத் துறை, வங்கித் துறை நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன.

இதில், 2013ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை இன்ஜினியரிங், டிப்ளமோ, ஐ.டி.ஐ., கலை மற்றும் அறிவியல் படிப்புகள் படித்த மாணவர்கள் பங்கு பெறலாம்.

முகாமில் பங்கேற்க தங்களை பற்றிய விபரங்களை www.jobs factory.in என்ற இணைய தளத்தில் பதிவு செய்யுமாறு, சூர்யா கல்வி குழும வேலை வாய்ப்பு அலுவலர் சந்தானகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

NEWS: DINAMALAR 13/09/2016